




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"









Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 251 05.03.2026 THURSDAY MAASI : 21 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 251 05.03.2026 வியாழக்கிழமை மாசி : 21 விலை : ரூ.5/-


## ஓமன், குவைத் தலைவர்களுடன்

# "பிரதமர் ஆலோசனை!"




## 'திருச்சி ரயில்வே அலுவலக நுழைவு வாயிலுக்கு தமிழில் பெயர் சூட்டுக' இபிஎஸ்

சென்னை: மார்ச்.5-

"பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றை தமிழக மக்கள் நன்கறிவார்கள். எனவே, திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு தமிழில் பெயர் சூட்டிட வேண்டும்" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "புதியதாக கட்டி முடிக்கப்பட்ட திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு 'கர்த்தவ்ய துவார்' என இந்தியில் பெயரிடப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்களில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் பெயர்கள் குறிப்பிடப்படும் நிலையில், இந்த வாயிலின் பெயரில் உள்ள தமிழ்க் குறிப்பு உரிய மொழிபெயர்ப்பு இல்லாமல், இந்திக்கான சொல்லாகவே பொறிக்கப்பட்டுள்ளது.

இதற்கான எதிர்க்குரல்களுக்கு மதிப்பு அளித்து, தற்போது இந்திப் பெயரை அகற்றிட ரயில்வே அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் வருகின்றன. பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றை தமிழக மக்கள் நன்கறிவார்கள்.

உலக நாடுகளுக்கு செல்லும்போது கூட உலகின் தொன்மைமிகு மொழியாம் நம் தமிழின் சிறப்புகளை பெருமிதத்தோடு குறிப்பிடும் நமது பிரதமர், சமீபத்தில் மலேசியப் பல்கலைக்கழகத்தில் "திருவள்ளுவர் இருக்கை" அமைக்க மலேசிய அரசோடு ஒப்பந்தம் கையெழுதிட்டதும் நினைவுகூரத்தக்கது.

இப்படி தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தை தொடர்ந்து மத்திய அரசு அளித்துவரும் நிலையில், இதுபோன்ற நிகழ்வுகளை தவிர்த்திட வேண்டும். எனவே, மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு, மேற்கூறிய நுழைவு வாயிலுக்கு தமிழில் பெயர்சூட்டிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன் வலியுறுத்தல்:

அமமுக பொதுச் செயலாளர் தினகரன் வெளியிட்ட அறிக்கையில், "திருச்சியில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டிருக்கும் மண்டல ரயில்வே மேலாளர் அலுவலகத்தின் நுழைவாயிலில் "கர்தவ்ய த்வார்" என இந்தி மொழியில் எழுதப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாள்தோறும் தமிழக மக்களும், ஏராளமான ரயில் பயணிகளும் வந்து செல்லும் ரயில்வே மண்டல மேலாளர் அலுவலகத்தின் நுழைவாயிலில் அனைவருக்கும் புரியும் வகையில் எழுதி வைக்க வேண்டிய பெயர்ப் பலகையை இந்தியில் மட்டுமே எழுதி வைத்திருப்பது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

எனவே, பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் திருச்சி ரயில்வே மண்டல மேலாளர் அலுவலகத்தின் நுழைவாயிலில் தமிழில் பெயர் வைக்கப்படுவதை உறுதி செய்வதோடு, இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாத வகையில் தெற்கு ரயில்வே அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் எனவும் ரயில்வே துறையையும், மத்திய அரசையும் வலியுறுத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

## இந்திய குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.5-

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையிலான போர் மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளில் தீவிரமடைந்து வரும் நிலையில், ஓமன் சுல்தான் மற்றும் குவைத் இளவரசருடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது, அங்கு வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து அவர் தனது கவலையைத் தெரிவித்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார். முன்னதாக, திங்கள்கிழமை அன்று சவூதி அரேபியா, பஹ்ரைன் மற்றும் ஜோர்டான் நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த நிலையில், நேற்று ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் மற்றும் குவைத் இளவரசர் ஷேக் சபா அல்காலேத் அல்ஹமத் அல் முபாரக் அல்சபா ஆகியோருடன் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.



வளைகுடா பிராந்தியத்தில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளதால் வான் வழிப் போக்குவரத்து முடக்கம், கச்சா எண்ணெய் விநியோகத் தடை மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இதன் பின்னணியில் நடைபெற்ற ஆலோசனையின் போது, வளைகுடா நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்தார். மேலும், அங்கு வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்து அவர் விரிவாக கேட்டறிந்தார்.

முன்னதாக, ஈரான் மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் மிக மோசமான சூழல் குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது. அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு தான் தற்போதைய முக்கிய முன்னுரிமை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் பஹ்ரைன் மன்னர் ஹமத் பின் ஈசா அல் கலீஃபா ஆகியோருடன் பிரதமர் மோடி பேசுகையில், பிராந்தியத்தில் அமைதி திரும்புவதே இப்போதைய மிக முக்கியமான தேவை என்பதை வலியுறுத்தினார்.

மேலும், இந்த இக்கட்டான காலக் கட்டத்தில் அங்குள்ள இந்தியர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக சவுதி இளவரசருக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களின் முகத்தில் புன்னகை! பள்ளிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அமைச்சர் உத்தரவு

திண்டுக்கல், மார்ச்.5-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், அய்யம்பாளையத்தில் உள்ள என்.பி.ஆர். அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் பள்ளிக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

அமைச்சரின் நேரிடை ஆய்வு:

இக்கோரிக்கையை ஏற்று, திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் பள்ளிக்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி , பள்ளி வளாகம் முழுவதும் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்தார். அதன் பின்னர், பள்ளிக்கும் மாணவர்களுக்கும் தேவையான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உத்தரவிட்டார்.




அறிவிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள்:

பள்ளி மைதானத்தில் புதிய பேஸ்கட்பால் (Basketball) கிரவுண்ட் அமைக்க உத்தரவு. பள்ளிக்கு புதிய சுற்றுப்புற சுவர் அமைத்தல்.மாணவர்கள் காலைப் பிரார்த்தனை செய்யும் மைதானத்தில் பேவர்பிளாக் (Paver block) கற்கள் பதிக்க உத்தரவு. மாணவர்களுக்குத் தேவையான அனைத்து விளையாட்டு உபகரணங்களையும் உடனடியாக வழங்க ஆணையிட்டார்.

நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர் கழக தங்கராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், உதவி பொறியாளர்கள் இராமநாதன், பாலன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ், சித்தரேவு ஊராட்சி செயலாளர் பாறைப்பட்டி கண்ணன், சித்தரேவு மணிமாறன், அய்யம்பாளையம் சுந்தர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்த அனுமதி அளித்து ஐகோர்ட் உத்தரவு

சென்னை: மார்ச்.5-

பிரபல சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்த அனுமதியளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருமணம் செய்து ஏமாற்றிவிட்டதாக சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு எதிராக, ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா, சமூக வலைதளங்களில் பதிவிட்ட பதிவுகளில், மாதம்பட்டி பாகசாலா நிறுவனத்தையும் இணைத்திருந்தார்.

இதை எதிர்த்து மாதம்பட்டி பாகசாலா நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக, மாதம்பட்டி ரங்கராஜ் ஜாய் கிரிசில்டா இடையில் மத்தியஸ்தம் செய்ய உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி பி.என். பிரகாஷ் நியமித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது, தனது குழந்தையின் தந்தை மாதம்பட்டி ரங்கராஜ் என நிரூபிக்க, அவருக்கு மரபணு சோதனை நடத்தப்பட வேண்டும் என ஜாய் கிரிசில்டா தரப்பிலும், மரபணு சோதனைக்கு தயார் என மாதம்பட்டி ரங்கராஜ் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது. இது



சம்பந்தமாக மனுவாக தாக்கல் செய்யும்படி நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் விசாரணைக்கு வந்தபோது, ஜாய் கிரிசில்டா மற்றும் மாதம்பட்டி தரப்பில் மரபணு பரிசோதனை நடத்த அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்த அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளார்.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தடயவியல் துறையையும், ஆய்வகத்தையும் தொடர்பு கொண்டு, மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, வழக்கறிஞர் ஆணையரை நியமித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மரபணு பரிசோதனைக்குப் பின், அறிக்கையைப் பெற்று, அதனை மத்தியஸ்தரிடம் சமர்ப்பிக்கும்படி வழக்கறிஞர் ஆணையருக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கு விசாரணையை மார்ச் 30ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் வந்தாலும் படுகொலை உறுதி: இஸ்ரேல் எச்சரிக்கை



டெல் அவிவ், மார்ச்.5-
"ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் தேர்வு செய்யப்பட்டாலும் அவரை படுகொலை செய்வது உறுதி" என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் அமெரிக்கா இணைந்து நடத்திய தாக்குதலில், ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்ட நிலையில், அந்நாடு புதிய உச்ச தலைவரை தேர்வு செய்யவுள்ள சூழலில், இத்தகைய எச்சரிக்கையை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தனது எக்ஸ் பக்கத்தில் ஹீப்ரு மொழியில் பகிர்ந்த பதிவில், "ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் தேர்வு செய்யப்பட்டாலும் அவரை படுகொலை செய்வது உறுதி. அவரது பெயர் என்னவாக இருந்தாலும், அவர் எங்கு பதுங்கியிருந்தாலும் அவரைத் தேடி அழிப்போம்.இதற்காக, நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்து முழு பலத்துடன் செயல்படுவோம். தற்போதைய ஈரான் ஆட்சி தன்னை மீள்கட்டமைப்பதற்கான வாய்ப்புகளை நசுக்குவோம். ஈரானிய மக்கள் இந்த ஆட்சியை தூக்கி எறிந்துவிட்டு புதிய ஆட்சியை அமைக்கும் சூழலை உருவாக்குவோம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "இஸ்ரேலிய பிரதமருக்கும், இஸ்ரேலியப் படைகளுக்கும், எப்போதும் தயார் நிலையில் இருக்கும்படியும், போரில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தியுள்ளேன்" என்று காட்ஸ் தெரிவித்துள்ளார்.ஈரான் ஊடகத் தகவலின்படி செவ்வாய்க் கிழமை இரவு ஈரானின் அடுத்த உச்ச தலைவராக காமேனியின் மகன் மோஜ்டபா (Mojtaba) தேர்வு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. புரட்சிகர இஸ்லாமியப் படைகளின் அழுத்தத்தின் பேரில் இத்தேர்வு நடந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.இஸ்ரேல் அமெரிக்கா இணைந்து நடத்திய தாக்குதலில் கடந்த பிப்.28 அன்று காமேனி கொல்லப்பட்டார். அவருடன், அவரது மகள், மருமகன், பேத்தி உள்ளிட்டோர் கொல்லப்பட்டனர். காயங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த காமேனியின் மனைவி கோஜஸ்தேஹ் பாகெர்சதேவும் உயிரிழந்தார்.

காமேனியின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று (மார்ச் 4) மாலை நடைபெறுகிறது. இதனையடுத்து இன்று மாலை முதல் 3 நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் இஸ்ரேல் மோதல் 5வது நாளை எட்டியுள்ள நிலையில், உள்ளூர் ஊடகத்துக்கு பேட்டியளித்த ஈரான் மூத்த தலைவர் ஒருவர், "இஸ்ரேல் இன்று ஈரானின் பல்வேறு பகுதிகளிலும் லெபனானில் குடியிருப்புப் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தியுள்ளது.இந்தத் தாக்குதல்களுக்கு அஞ்சி பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை. அமெரிக்கா மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்களுடன் சமரசத்துக்கான எந்தவொரு அடித்தளமும் இல்லை. எங்கள் விருப்பப்படி இந்தப் போர் தொடரும்" என்று கூறியுள்ளார்.

# எந்தப் பிரச்சினைக்கும் போர் தீர்வாகாது!

ஈரான், மார்ச்.5-
ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திவரும் தாக்குதல்கள், ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி காமேனி படுகொலை, பதிலடி என்கிற பெயரில் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் நடத்திவரும் தாக்குதல்கள் ஆகியவை மேற்கு ஆசியப் பிராந்தியத்தை அதிரவைத்திருக்கின்றன.

கடந்த எட்டு மாதங்களில் இரண்டாவது முறையாக ஈரான் மீது நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்னும் கவலை எழுந்திருக்கிறது. ஈரான் உடனான அணு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது தொடர்பாக அந்நாட்டுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திவந்த நிலையில், திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கிறது.



ஈரான் முதலில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததற்கான தகவல்கள் இல்லை என அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்பான பென்டகன் கூறியிருக்கிறது. ஈரானால் இஸ்ரேலுக்குத்தான் அச்சுறுத்தலே தவிர, அமெரிக்காவுக்கு அல்ல என்று ஜனநாயகக் கட்சியினரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஈரான் அணு ஆயுதத்தையும் ஏவுகணைகளையும் தயாரிப்பதைத் தடுப்பதுதான் நோக்கம் என டிரம்ப் அளித்திருக்கும் விளக்கமும் பலவீனமானது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை இயற்கை யுரேனியத்துக்கு நிகராக நீர்த்துப்போகவைக்க ஈரான் ஒப்புக்கொண்டதாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் சமாதான முயற்சியில் ஈடுபட்ட ஓமன் சுட்டிக்காட்டியிருக்கிறது.

உச்சத் தலைவரையே இழந்துவிட்ட நிலையில், கட்டுப்பாடற்ற நிலைக்குச் சென்றிருக்கும் ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது மட்டுமல்லாமல் ஹோட்டல்கள், தூதரகங்கள் உள்ளிட்ட பிற கட்டிடங்களையும் தாக்கிவருகிறது; இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு எண்ணெய் எடுத்துச் செல்வதற்கான முதன்மை வழியான ஹோர்முஸ் நீரிணையைக் கடக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் அறிவித்திருக்கிறது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி பயங்கரவாத அமைப்பு செங்கடல் பிராந்தியத்தில் தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித்திருக்கிறது. செங்கடல் வழியாக இந்தியாவின் 50% ஏற்றுமதி நடந்துவருகிறது; கச்சா எண்ணெய், புதைபடிவ எரிபொருள்கள் உள்ளிட்ட இறக்குமதிப் பொருள்கள் செங்கடல் வழியாகத்தான் இந்தியாவுக்கு வருகின்றன. ஏராளமான விமானங்கள் ரத்து, வான் எல்லை மூடல் என மேற்கு ஆசியாவில் பதற்றம் அதிகரித்திருக்கிறது.

மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள 90 லட்சம் இந்தியர்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகி இருக்கிறது. காமேனி யதேச்சதிகார ஆட்சியை நடத்தியவர் என்கிற விமர்சனங்கள் இருந்தாலும், அவரது மறைவால் ஈரானில் சமூக அளவில் பெரிய மாற்றம் வரும் என எதிர்பார்க்க முடியாது. மறுபுறம், போர்களுக்கு முடிவுகட்டுவதாகப் பேசிவந்த டிரம்ப் அதற்கு முரணாகச் செயல்படுகிறார்.

வெனிசுலா, ஈரானைத் தொடர்ந்து கியூபா மீதும் டிரம்ப் கண்வைத்திருப்பது பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஈரானுக்கு ஆதரவாகச் செயல்படும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளைக் குறிவைத்து, லெபனானிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருகிறது.

சீனா, ரஷ்யா, ஸ்பெயின் போன்ற சில நாடுகளே அமெரிக்காவையும் இஸ்ரேலையும் கண்டித்திருக்கின்றன. ஐநா பாதுகாப்பு கவுன்சிலிலும் இப்பிரச்சினை தொடர்பாக உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினை தொடர சில நாடுகளை அனுமதிக்கக் கூடாது. அமெரிக்காவும் ஈரானும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். போர்கள் அழிவைத் தவிர வேறு எந்த நன்மையையும் மனிதகுலத்துக்குத் தராது என்பதை அனைவரும் உணர வேண்டும்!

# 'இஸ்ரேலில் வழக்கம்போல கட்டுமான பணிகளில் ஈடுபடுகிறோம்' உ.பி தொழிலாளர்கள் பகிர்வு

லக்னோ, மார்ச்.5-
இஸ்ரேல் நாட்டில் வழக்கம்போல கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வருகிறோம் என்று உத்தர பிரதேச தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் ராணுவத்தின் அயர்ன் டோம் அமெரிக்க ராணுவத்தின் தாட் வான் பாதுகாப்பு கவசங்கள் காரணமாக இஸ்ரேலில் இயல்பு வாழ்க்கை பெரிதாக பாதிக்கப்படவில்லை. இஸ்ரேல் நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு அறைகள் கட்டப்பட்டு உள்ளன. ஈரான் ராணுவ ஏவுகணைகள், இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்தால் சைரன் ஒலி எழுப்பப்படும். அப்போது மட்டும் பாதுகாப்பு அறைகளில் மக்கள் தஞ்சமடைகின்றனர்.


இஸ்ரேல் முழுவதும் சுமார் 42,000க்கும் மேற்பட்ட இந்திய தொழிலாளர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக கட்டுமானம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் அவர்கள் அதிகமாக உள்ளனர். உத்தர பிரதேசத்தின் பாராபங்கியை சேர்ந்த சுமார் 25 பேர் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் கட்டுமான தொழிலாளர்களாக பணியாற்றி வருகின்றனர். அவர்களில் அங்குர் சிங் என்பவர் அண்மையில் தனது குடும்பத்தினருடன் வீடியோ காலில் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணைகள் வீசப்படுகின்றன. ஆனால் அவை நடுவானில் இடைமறித்து அழிக்கப்படுகின்றன. நாங்கள் தனித்தனி வீடுகளில் வசிக்கிறோம். ஒரு வீட்டில் 10 தொழிலாளர்கள் தங்கி உள்ளோம். தினமும் காய்கறி, மளிகை பொருட்களை வாங்க வழக்கம் போல கடைக்குச் செல்கிறோம். சிலர் நகரை சுற்றிப் பார்க்கவும் செல்கின்றனர். நாள்தோறும் கட்டுமான பணிக்குச் சென்று வீடு களுக்கு திரும்புகிறோம். எங்களது இயல்பு வாழ்க்கை சிறிதளவு கூட பாதிக்கப்படவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் பணியாற்றும் ராம் அச்சல் உறவினர்களிடம் வீடியோ காலில் பேசும்போது, "டெல் அவிவ் நகரில் இருந்து 170 கி.மீ. தொலைவில் உள்ள நகரில் கட்டுமான பணியில் ஈடுபட்டு வருகிறேன். இங்கு வழக்கம்போல கட்டுமான பணி நடைபெறுகிறது. சைரன் ஒலி கேட்கும்போது மட்டும் பதுங்கு அறைகளுக்கு செல்வோம். அதன் பிறகு தொடர்ந்து கட்டுமான பணிகளில் ஈடுபடுவோம்" என்று தெரிவித்தார்.

இஸ்ரேலில் பணியாற்றும் தொழிலாளர்களின் உறவினர்கள் கூறும்போது, "இஸ்ரேலை குறிவைத்து 10 நிமிடங்களுக்கு ஒரு முறை ஏவுகணை வீசப்படுகிறது. ஆனால் அவை நடுவானில் துல்லியமாக அழிக்கப் படுகின்றன. சைரன் ஒலி கேட்கும்போது மட்டும் இந்திய தொழிலாளர்கள் பதுங்கு அறைகளில் தஞ்சம் அடைகின்றனர். இஸ்ரேலில் உள்ள எங்களது உறவினர்களிடம் தொடர்ந்து வீடியோ காலில் பேசி வருகிறோம். அவர்கள் பாதுகாப்பாக இருந்தாலும் எங்களுக்கு மனதளவில் அச்சம் நீடிக்கிறது" என்று தெரிவித்தனர்.

# எரிபொருள் பற்றாக்குறையை சமாளிக்க இந்தியா ஆலோசனை



புதுடெல்லி, மார்ச்.5-
மேற்கு ஆசியாவில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கச்சா எண்ணெய் டேங்கர் கப்பல் போக்குவரத்து முடங்கி உள்ளது.

இதனால் ஏற்படக் கூடிய எரிபொருள் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான பல அவசரகால நடவடிக்கைகள் குறித்து டெல்லியில் உள்ள உயர் அதிகாரிகள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். குறிப்பாக, உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவது, ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரிப்பது, எல்பிஜி சிலிண்டர்களுக்கு கட்டுப்பாடு விதிப்பது போன்ற நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி எக்ஸ் தளத்தில், "நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். நாட்டின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய அனைத்து அவசியமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். போதுமான அளவில் கையிருப்பு உள்ளதால் உடனடியாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது" என பதிவிட்டுள்ளார்.

# ரயில்வே அலுவலக நுழைவாயிலில் இந்தியில் பெயர் திருச்சியில் திமுகவினர் முற்றுகை போராட்டம்

திருச்சி, மார்ச்.5-
திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலக நுழைவு வளைவில் இந்தியில் பெயர் எழுதப்பட்டதை எதிர்த்து, அந்த அலுவலகத்தை முற்றுகையிட்டு திமுகவினர் போராட்டம் நடத்தினர்.



திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையம் அருகே திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்துக்கு அண்மையில் புதிதாக நுழைவு வளைவு கட்டப்பட்டது.

அதில், இந்த அலுவலகத்தின் இந்தி பெயரான 'கர்தவ்ய த்வார்' என்கிற வாசகத்தை இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய எழுத்துகளைக் கொண்டு எழுதியுள்ளனர்.

தமிழர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வகையில் இந்தியில் பெயர் அமைத்துள்ளனர் தெற்கு ரயில்வே நிர்வாகத்தினரை கண்டித்து திருச்சியில் திமுகவினர் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி ஜங்சன் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பு நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்துக்கு மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மேற்கு மாநகர செயலாளர் மேயர் மு.அன்பழகன் முன்னிலை வகித்தார்.

மேலும், நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு பெயின்ட் கொண்டு அழித்தனர். மத்திய அரசின் இந்தி திணிப்பு நடவடிக்கையைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இப்போராட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், துணைச் செயலாளர் முத்துச்செல்வம், பகுதி செயலாளர் காஜாமலை விஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே, "இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பாஜக. திருச்சி மண்டல ரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளனர்.தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும். இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பாஜக அரசு உணர வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.



# எம்எல்ஏ விடுதி பராமரிப்பு பணிக்கான டெண்டர் நடவடிக்கைகளை தொடர சென்னை ஐகோர்ட் அனுமதி

சென்னை, மார்ச்.5-
சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள எம்எல்ஏ விடுதியில் பராமரிப்பு பணிகளுக்கான டெண்டர் நடவடிக்கைகளை தொடர அனுமதி அளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள எம்எல்ஏ விடுதியில் உள்ள அறைகள் பராமரிப்பு பணிகளுக்கு பொதுப் பணித் துறை டெண்டர் கோரியது. பிப்ரவரி 28ஆம் தேதி கோரப்பட்ட இந்த டெண்டர் படிவங்களை சமர்ப்பிக்க இரண்டு நாட்கள் மட்டும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

டெண்டர் கோரி விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள், பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடம் தள ஆய்வு சான்றிதழ் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

சான்று கோரி விண்ணப்பித்தும் சான்று வழங்காததால், டெண்டர் நடைமுறைகளுக்கு தடை விதிக்கக் கோரி, ஒப்பந்ததாரர்கள் இருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு, நீதிபதி தண்டபாணி முன் விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்களுக்கு தள ஆய்வு சான்று வழங்கப்பட்டு விட்டதாக அரசுத்தரப்பில் ஆஜராகியிருந்த கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் தெரிவித்தார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, டெண்டர் நடவடிக்கைகளை தொடர அனுமதியளித்து, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# அரசு சொத்துகளை பாதுகாப்பதில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை: தாலுகா சட்டப்பிரிவை ஏற்படுத்த ஐகோர்ட் பரிந்துரை

மதுரை, மார்ச்.5-
அதிகாரிகள் அரசு சொத்துகளை பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுவதில்லை என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சேதுமாதவன், வேல்முருகன் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், எங்கள் நிலப் பிரச்சினை தொடர்பாக 2001ல் ராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யவும், நிலப் பிரச்சினைகளை கையாள்வது தொடர்பாக அரசு அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு பிறப்பிக்கவும் கோரப்பட்டது.இந்த மனுவை விசாரித்த நீதிபதி செந்தில்குமார் பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கு அரசு புறம்போக்கு நிலத்தை பயன்படுத்துவது தொடர்பானது. இந்த வழக்கில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வட்டாட்சியர் மீது நடவடிக்கைக்கு உத்தரவு விடப்பட்டுள்ளது.



ஆனால், ஆட்சியர் மீது நடவடிக்கை இல்லை. ஒருதலைப்பட்சமான தீர்ப்பு வழக்கு தள்ளுபடியான நிலையில், அதற்கு எதிராக அரசு தரப்பு மேல்முறையீடு செய்யவில்லை. இதிலிருந்து அதிகாரிகள் அரசு சொத்துகளை பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுவ தில்லை என்பது தெரிகிறது.பொது நிலங்களின் பாதுகாவலராக இருக்கும் அரசாங்கம், மதிப்பு மிக்க அரசு சொத்துகள் சம்பந்தமாக வழக்கு தொடர்ந்தால் அதனை அமைதியாக பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது.


எனவே, இந்த வழக்கு தொடர்பாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மீது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை முதன்மைச் செயலர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.மேலும் அவர் அரசு நிலங்களை பாதுகாப்பது, வழக்கை சந்திப்பது போன்ற விவகாரங்களில் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு வழக்கறிஞர்கள் மற்றும் வருவாய் அதிகாரிகளுக்கு தெளிவான வழிகாட்டுதல்களை பிறப்பிக்க வேண்டும்.அதில் நீதிமன்ற வழக்குகளில் அரசு அதிகாரிகளை எதிர்தரப்பாகச் சேர்க்கும்போது எடுக்க வேண்டிய கட்டாய நடவடிக்கைகள், உத்தரவுகளை ரத்து செய்வதற்கான வழி, மேல்முறையீடுகள் மற்றும் தாமதத்தை மன்னிப்பதற்கான மனுக்கள், ஆட்சியர், மாவட்ட வருவாய் அதிகாரி மற்றும் வருவாய் பிரிவு அதிகாரிகளால் கண்காணிக்கப்படும் வகையில் ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு சட்டப் பிரிவை அமைக்க வேண்டும்.வருவாய் அதிகாரி தலைமையிலான சட்டப் பிரிவு, அரசு ஒரு தரப்பாக உள்ள அனைத்து உரிமையியல் வழக்குகளையும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, சரியான நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யும்.

அவ்வப்போது அறிக்கைகள் நில நிர்வாக ஆணையருக்கும், அரசாங்கத்தின் கூடுதல் தலைமைச் செயலருக்கும் அனுப்ப வேண்டும். இதனை அதிகாரிகள் பின்பற்றும் வகையில் 6 மாதத்தில் அரசு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மதுரை அமர்வின் அதிகார வரம்புக்குள் அரசு எந்தெந்த வழக்குகளில் எதிர்மனுதாரராக உள்ளது என்றும், எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் குறித்தும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் 4 மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை மார்ச் 16க்கு தள்ளி வைக்கப்படுகிறது.



■ ஈரோடு மொடக்குறிச்சி கணபதிபாளையம் புஞ்சை காளமங்கலம் கிராமம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், யாதுமாகி நிற்பவள் அறக்கட்டளையின் சார்பாக, உலக மகளிர் தின விழா பெண் மருத்துவர்அன்புச்செல்வி அவர்கள் முன்னிலையிலும் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர் மோனிஷா மாலினி தலைமையில் நடைபெற்றது. மேலும் நிகழ்ச்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் மற்றும் செவிலியர்கள் அனைவருக்கும் அவர்களின் சமூக சேவையை பாராட்டி அறக்கட்டளையின் சார்பாக வாழ்நாள் சாதனையாளர் விருது என்ற நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் அறக்கட்டளை சார்பாக உலக மகளிர் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். அறக்கட்டளையின் நிறுவனர் புன்னகை தூரன் இரா.சங்கர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



■ திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி சாதாரண கூட்டம், உடுமலை நகர மன்ற தலைவர் மத்தீன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி வளர்ச்சி பணிகள் மற்றும் நடைபெற்று வரும் வார்டு பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஆணையாளர், நகராட்சி வளாச்சி திட்ட பொறியாளர், நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து, காணொலி காட்சி வாயிலாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அம்பேத்கர் நகரில் புதியதாக ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கலந்து கொண்டார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் உள்ளனர்.



## பெண்மையின் பெரும் திருவிழா! திருப்பூர் குமரன் கல்லூரியில் ‘ஜனநாயகி2026’ மகளிர் தின கொண்டாட்டம்

திருப்பூர், மார்ச்.05-

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 'ஜனநாயகி2026' என்ற பெயரில் மகளிர் தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கல்லூரியுடன் இணைந்து ரோட்டரி திருப்பூர் காந்திநகர் மற்றும் ரோட்டரி திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி ஆகிய சங்கங்கள் இவ்விழாவை ஒருங்கிணைத்தன.

கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி வரவேற்புரை ஆற்றினார். விழாவில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை கற்பகம், தமிழ் ஆர்வலர் கோகிலா, இளவரசி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவிகளுக்கு உத்வேகம் அளித்தனர். ரோட்டரி சங்க நிர்வாகிகள் மணிமாறன், ராஜகோபால், அருள் செல்வம் மற்றும் ஹேமந்த் ஜெயின் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் ஒரு பகுதியாக மாணவிகளுக்கு இடையே குழு நடனம், சமையல், கோலம், கவிதை, மெகந்தி மற்றும் பாரம்பரிய விளையாட்டான உறி அடித்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவிகள் ஆர்வமுடன் கலந்துகொண்டு தங்களது பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## டெஹ்ரானில் இந்திய மாணவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம்: இந்தியத் தூதரகம் ஏற்பாடு

புதுடெல்லி, மார்ச்.5-

அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகக் குற்றம்சாட்டி, ஈரானில் கடந்த சனிக்கிழமை முதல் அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதையடுத்து ஈரானும் பல்வேறு அமெரிக்க விமான தளங்களை குறிவைத்து பதில் தாக்குதல் தொடுத்து வருகிறது. இந்நிலையில் டெஹ்ரான் நகரிலுள்ள இந்திய மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு இந்தியத் தூதரகம் நேற்று மாற்றியுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள தூதரக அதிகாரிகள் செய்துள்ளனர்.




இதுகுறித்து டெஹ்ரான் நகரில் செயல்பட்டு வரும் இந்தியத் தூதரகம் சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறும்போது, “போர்ப் பதற்றம் காரணமாக டெஹ்ரான் நகரிலுள்ள இந்திய மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியுள்ளோம்.

டெஹ்ரானுக்கு வெளியே அமைந்துள்ள இடங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடமாற்றத்தை விரும்பாத சில மாணவர்கள் மட்டும் டெஹ்ரானிலேயே தங்கியுள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது.

## ஈரோட்டில் நவீன வசதிகளுடன் ‘உழைப்பாளர் நலக்கூடம்‘ முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

ஈரோடு, மார்ச்.5-

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்தபடி காணொளி காட்சி வாயிலாக, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடங்களைத் திறந்து வைத்தார்.



இதனைத் தொடர்ந்து, ஈரோடு மாநகராட்சி, மணிக்கூண்டு, எல்லை மாரியம்மன் கோவில் மற்றும் நேதாஜி சாலையில் அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தினை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கு வழங்கினார். மேலும், பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகையினையும் அவர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஜெயலட்சுமி உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



## விரைவில் நற்செய்தி வரும் மக்களைத் தேடி மருத்துவ ஊழியர்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, மார்ச் .05-

மக்களைத் தேடி மருததுவத் திட்ட தன்னார்வளர்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்கக்கோரி கோரிக்கை மனு கொடுத்தனர். தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று தன்னாளர்வளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தில் ஆத்தூர் ஒன்றியத்தில் மட்டும் 28 தன்னார்வளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் வீடு தேடி சென்று மருத்துமனைக்கு வரஇயலாத முதியோர் மற்றும் நோயளிகளுக்கு மருந்து, மாத்திரைகள் வழங்குவது, மற்றும் உடல் பரிசோதனை செய்யும் பணிகளை செய்து வருகின்றனர். கடந்த 2021ம் வருடம் பணியில் சேர்ந்த தன்னார்வளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.5,500 வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் நோயாளிகளின் வீடுகளுக்கு செல்லும்போது வாகனங்களுக்கான எரிபொருள் செலவு அதிமாகிறது. நான்கு வருடமாக ஊதிய உயர்வு எதிர்பார்த்த தன்னார்வளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. நேற்று ஆத்தூர் ஒன்றியத்தை சேர்ந்த 28 தன்னார்வளர்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து, தங்களுக்கு (தன்னார்வளர்களுக்கு) ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை மனு கொடுத்தனர். அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தாயுள்ளத்தோடு அனைவருக்கும் ஊதிய உயர்வு வழங்கி வரும் தமிழக முதல்வரின் கவனத்திற்கு உங்களுடைய கோரிக்கையை கொண்டு செல்கிறேன். விரைவில் உங்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பார் என்றார்.

நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் நாகராஜன், பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் (எ) மணி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 8வது வார்டு செயலாளர் மார்க்கெட் சக்திவேல், சிறுபான்மை அணியைச் சேர்ந்த முஜீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளரும், குமாரபுரம் ஊராட்சி மன்ற தலைவரும், ஊராட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவருமான அனிதா பென்ஸ் ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு அளித்தபோது....



## சென்னையில் 34 காவல் ஆய்வாளர்களை பணியிட மாற்றம் செய்து காவல் ஆணையர் அருண் உத்தரவு

சென்னை, மார்ச்.5-

சென்னையில் 34 காவல் ஆய்வாளர்களை பணியிட மற்றம் செய்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார். சட்டமன்ற தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட உள்ள நிலையில் 34 ஆய்வாளர்களை இடமாற்றம் செய்து செய்யப்பட்டுள்ளனர்.



## தெஹ்ரானில் குண்டுவீசி வந்த இஸ்ரேல் விமானப் படையின் தி35 விமானத்தை சுட்டு வீழ்த்தியது ஈரான் படை

தெஹ்ரான், மார்ச்.5-

தெஹ்ரானில் குண்டுவீசி வந்த இஸ்ரேல் விமானப் படையின் தி35 விமானத்தை ஈரான் படை சுட்டு வீழ்த்தியது. இஸ்ரேலின் தி35 போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபோது அதில் இருந்த வீரரும் கொல்லப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்காஇஸ்ரேல் கூட்டு வான்வழித் தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்காஇஸ்ரேல் ஈரான் போர் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் அதிகரித்து வருகிறது. இன்று(04032026) இஸ்ரேலிய விமானப்படையின் தி35 போர் விமானம், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஈரானிய யாக்130 ஜெட் விமானத்தை தெஹ்ரான் மீது சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. இது ஒரு தி35 விமானத்தால் மனிதர்கள் கொண்ட விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட முதல் நிகழ்வாகும். கிட்டத்தட்ட 40 ஆண்டுகளில் இஸ்ரேலிய விமானப்படை மனிதர்கள் கொண்ட விமானத்துடன் வான்வழிப் போரில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.

ஈரான் இஸ்ரேல் மீது வழக்கமான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது, இருப்பினும் பெரும்பாலான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. மோதல் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலில் பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இன்று அதிகாலையில், ஈரானின் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து தெஹ்ரான் முழுவதும் தொடர் தாக்குதல்களை நடத்தி வருவதாக இஸ்ரேல் கூறியது.

இந்த நிலையில், தெஹ்ரானில் குண்டுவீசி வந்த இஸ்ரேல் விமானப் படையின் தி35 விமானத்தை ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டுவீழ்த்தியது. இதில் விமானத்தில் இருந்த வீரரும் கொல்லப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

## காமனை எரித்து நேர்த்திக்கடன்! மர்ம நோய்கள் தீர மிளகு தூவி வழிபாடு செய்த ஆயிரக்கணக்கான பக்தர்கள்

திண்டுக்கல், மார்ச்.5-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில், கடந்த 141 ஆண்டுகளாக அனைத்து சமுதாய மக்களும் மிக ஒற்றுமையுடன் கொண்டாடி வரும் புகழ்பெற்ற காமன் பண்டிகை காமதகன நிகழ்வுடன் நிறைவு பெற்றது.

*தனித்துவமான அலங்காரம்:* கடந்த பிப்ரவரி 18ம் தேதி பிருந்தாவனத் தோப்பிலிருந்து காமயசுவாமி மேளதாளங்களுடன் அழைத்து வரப்பட்டார். கரும்பு, அரச இலை, மா இலை, கொட்டமுத்து இலை மற்றும் பூக்களால் காமயசுவாமிக்குச் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.



*வினோத வழிபாடு:* விழா நிறைவு நாளான திங்கள் கிழமை பௌர்ணமி அன்று இரவு 12 மணியளவில் காமதகனம் நடைபெற்றது. காமனை எரிக்கும் போது, உடலில் உள்ள சரும நோய்கள் தீர வேண்டும் என்பதற்காகப் பக்தர்கள் நெருப்பில் மிளகு மற்றும் உப்பு போட்டு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபாடு செய்தனர்.

*தொடர் நிகழ்வுகள்:* செவ்வாய்க்கிழமை மாலை பெரிய திருநங்கை மூலம் ஒப்பாரி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மொச்சை பயிர் பிரசாதமாக வழங்கப்பட்டது.

*நிறைவு விழா:* காமனை எழுப்பும் நிகழ்ச்சியுடன் இந்த ஆண்டுக்கான விழா இனிதே நிறைவு பெறுகிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஜமீன்தார் முத்துக்குமார், தலைவர் சிவ.முருகேசன், செயலாளர் ஏ.கே.வி.ராஜா பொருளாளர் என்.சுப்பையா, துணைத் தலைவர்கள் ராகவன், மார்க்கம்பட்டி முருகன் துணைச் செயலாளர்கள் ஆர்.தியாகராஜன், எம்.பிரசன்னா, ஏ.அழகேசன், கே.சீனிவாசன், ஜெ.ராம்குமார், எஸ்.வினோத்சாரதி கௌரவ ஆலோசகர்கள் ஏ.கே.எஸ்.எஸ். பொன்ராஜ் வி. ராமகிருஷ்ணன், குணசேகரன், குருசாமி மோகன், கன்னியப்பன், இரவிச்சந்திரன், எஸ் ராஜாராம் தலைமையிலான விழாக் கமிட்டியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

சக்கர வியூகம்





## தில்லைவனம் தோப்புக்கு அரசுப் பேருந்து ஆவுடை பாலன் கோரிக்கையை நிறைவேற்றிய சபாநாயகர்

நெல்லை, மார்ச்.5-

நெல்லை மாவட்டம் ராதாபுரம் ஒன்றிய கவுன்சிலர் ஆவுடை பாலன் விடுத்த கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் அப்பாவு அவர்களின் சீரிய ஏற்பாட்டில் தில்லைவனம் தோப்புக்கு அரசுப் பேருந்து சேவை தொடங்கியது. விஜயாபதி விசுவாமித்திரர் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக, திசையன்விளை இடிந்தகரை இடையே இயங்கும் 19மி தடம் எண் கொண்ட பேருந்து, இனி விசுவாமித்திரர் கோவில் மற்றும் தில்லைவனம் தோப்பு வழியாக இயக்கப்படும். காலை ஊருக்குள் வந்த பேருந்திற்கு, ஒன்றிய கவுன்சிலர் ஆவுடை பாலன் தலைமையில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். கொடியசைத்து பேருந்து சேவையை தொடங்கி வைத்ததோடு, பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் போக்குவரத்து கிளை மேலாளர் சரவணன், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



## திருப்பூரில் 'ஒரே கூரையின் கீழ்' அனைத்தும் இசேவை மையத்துடன் எம்எல்ஏ அலுவலகம் திறப்பு

திருப்பூர், மார்ச் 5-

திருப்பூர் பார்க் ரோட்டில், பொதுமக்கள் வசதிக்காக ரூ.1.7 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இன்று கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய கட்டடத்தில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்துடன், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இசேவை மையம், காத்திருப்போர் அறை மற்றும் கணினி அறைகள் உள்ளிட்ட வசதிகள் இடம்பெற்றுள்ளன. இந்த அலுவலகத்தைத் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் மற்றும் செல்வராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் ரிப்பன் வெட்டித் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து, எம்.எல்.ஏ. அலுவலகம் மற்றும் இசேவை மையப் பிரிவுகளை அவர்கள் பார்வையிட்டனர். இதில் மாவட்ட வருவாய் அதிகாரி கார்த்திகேயன், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராஜ், கவுன்சிலர்கள் செந்தூர்முத்து, பி.ஆர். செந்தில்குமார், கல்வி குழு தலைவர். திவாகரன் பல்லடம் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பகுதி செயலாளர்கள் மேங்கோ பழனிச்சாமி, ஈஸ்வரமூர்த்தி, மு.க.உசேன், மியாமி அய்யப்பன், மாநகர மாணவரணி அமைப்பாளர் திலகராஜ், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலைச்செல்வி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



## மனு கொடுக்கும் போராட்டம்! தென்காசி ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்ட மாற்றுத்திறனாளிகள்

தென்காசி, மார்ச்.5-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக, தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில் இன்று பெரும் திரளானோர் பங்கேற்ற மனு கொடுக்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

*முக்கிய கோரிக்கைகள்:*

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் பின்வரும் முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டு மனை அல்லது வீடுகள் வழங்க வேண்டும். ஏ.ஏ.ஒய் (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் 35 கிலோ அரிசி தடையின்றி வழங்கப்பட வேண்டும். முதுகுத்தண்டு பாதிப்புக்குள்ளான மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் மருத்துவ உதவிகளை அரசு வழங்க வேண்டும்.

*நிர்வாகிகள் பங்கேற்பு:*

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலக் குழு உறுப்பினர் சிவகுமார் தலைமை வகித்தார். தங்கம் இப்ராஹிம், முத்துக்குமாரசாமி, முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலத் துணைத் தலைவர் முருகேசன் கோரிக்கைகள் குறித்து விளக்க உரையாற்றினார். தென்காசி, வல்லம், பாப்பான்குளம், திருவேங்கடம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சங்க நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இந்த எழுச்சிமிகு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆட்சியரிடம் தங்களது கோரிக்கை மனுவை அளித்தனர்.

## திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழா : விரிவான பாதுகாப்பு மற்றும் வசதி ஏற்பாடுகள் குறித்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் இஷிதா ராட்டி, ஐ.ஏ.எஸ். விளக்கம்



காரைக்கால், மார்ச்.5-

உலகப் புகழ்பெற்ற திருநள்ளாறு அருள்மிகு தர்பாரண்யேஸ்வர சுவாமி கோவிலில், வரும் மார்ச் 6ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 8:24 மணிக்கு சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளது. இதற்கான விரிவான பாதுகாப்பு மற்றும் வசதி ஏற்பாடுகள் குறித்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் இஷிதா ராட்டி, ஐ.ஏ.எஸ். விளக்கம் அளித்துள்ளார்.

*தரிசன வரிசைகள்:* இலவச தரிசனம் முதல் ரூ. 1000/ வரையிலான சிறப்பு தரிசன வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. டிக்கெட்டுகளில் முறைகேடுகளைத் தவிர்க்க ஹாலோகிராம் வசதி செய்யப்பட்டுள்ளது.

*பக்தர்கள் வசதி:* வெயிலின் தாக்கத்தைக் குறைக்க வரிசைகளில் தகரக் கூரைகள், அமர்ந்து செல்லும் வசதி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் குளிர்சாதன (AC) வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

*உணவு மற்றும் சுகாதாரம்:* வரிசையில் நிற்கும் பக்தர்களுக்கு குடிநீர், பிஸ்கட் மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நளன் குளம் சீரமைக்கப்பட்டு புதிய நீர் நிரப்பப்பட்டுள்ளது.

*சிறப்பு வசதிகள்:* மாற்றுத்திறனாளிகளுக்குத் தனி வழித்தடம், தாய்மார்களுக்குப் பாலூட்டும் அறைகள் மற்றும் போதுமான கழிவறை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

*போக்குவரத்து:* அண்டை மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களுக்காகக் கூடுதல் பேருந்து வசதிகளும், பல்வேறு இடங்களில் வாகன நிறுத்தங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

*உதவி எண்கள்:*

அவசர கால உதவிகளுக்குப் பக்தர்கள் *1070, 1077 மற்றும் 8300261071* ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## திருப்பூரில் ரூ.70.53 கோடியில் திடக்கழிவு மேலாண்மை பூங்கா அமைச்சர்கள் திறந்து வைத்தனர்

திருப்பூர், மார்ச்.05-

திருப்பூர் மாநகராட்சி கல்லாங்குத்து பகுதியில், ரூ.70.53 கோடி மதிப்பீட்டில் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பூங்காவினை அமைச்சர்கள் இன்று திறந்து வைத்தனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இப்பூங்காவினைத் திறந்து வைத்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தனர். அதனைத் தொடர்ந்து, தூய்மைப் பணியை ஊக்குவிக்கும் வகையில், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளைத் தனித்தனியாகப் பிரித்து வழங்குவதற்காகப் பொதுமக்களுக்குக் குப்பைத் தொட்டிகளையும் அவர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.மனிஷ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் கோவிந்தராஜ், உமாமகேஸ்வரி, தலைமைப் பொறியாளர் முகமது சபியுல்லா மற்றும் அரசுத் துறை சார்ந்த அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில், 2024 ஆம் ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்ளார்.



■ அய்யா! சிவ சிவ! அரோகரா! கன்னியாகுமரியில் விண்ணதிர் முழக்கத்துடன் ஐயா வைகுண்டர் அவதார தின ஊர்வலம் மிகச் சிறப்பாகவும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது.



## நாங்கள் மழலையர்கள் அல்ல… நாடாளும் தலைவர்கள்! விஎஸ்ஆர் பள்ளியில் பட்டமளிப்பு விழா

திசையன்விளை:மார்ச்.5-

திசையன் விளை வி.எஸ்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தாளாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் முன்னிலை வகிக்க, இயக்குனர் சௌமியா ஜெகதீஷ் தலைமை தாங்கினார். துணை முதல்வர் விஜயா தினகரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

*சிறப்பு விருந்தினர்:* நலம் மருத்துவமனை டாக்டர் அஜய் ராஜா கலந்துகொண்டு மழலையர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். "அர்ப்பணிப்புக்கும் கவனச்சிதறலுக்கும் இடையே உள்ள சிறிய இடைவெளியே எதிர்காலத்தை நிர்ணயிக்கும்" என்று அவர் ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். எல்கேஜி மாணவன் சுஷாந்த் அனைவரையும் வரவேற்றான். *சாதனை:* யுகேஜி மாணவி பவிஷா ஸ்ரீ 100 பூக்களின் பெயர்களைத் தடையின்றி மனனமாகச் சொல்லி அனைவரின் பாராட்டையும் பெற்றார். "நாங்கள் மழலையர்கள் அல்ல… நாடாளும் தலைவர்கள்" என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் மாணவர்கள் ஏந்தி வந்த பதாகைகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பள்ளியின் தாளாளர் பேசுகையில், "மாணவர்களின் எதிர்காலக் கனவை நிறைவேற்றுவதே பள்ளியின் நோக்கம்" என்று குறிப்பிட்டார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. துணை முதல்வர் விஜயா தினகரன் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.



■ சென்னை பெரும்பாக்கம் ஸ்ரீமன் அய்யா நாராயணசாமி அற்புதப்பதி நிழல் தங்கலில், அய்யா வைகுண்டரின் 194 வது அவதார தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் ஜெ.முத்து ரமேஷ் நாடார் கலந்து கொண்டு, அன்புக்கொடி மக்களுக்கு நீர் மற்றும் மோர் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் சங்க பொதுச் செயலாளர் வீரக்குமார், இளைஞரணி தலைவர் நெல்லை பாஸ்கர், நாடார் பரப்புரை அணித்தலைவர் பேச்சி ராஜன் மற்றும் பதி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000